ஜம்மு-காஷ்மீர்: வகுப்பறையில் பூட்டப்பட்ட மாணவர்

ஊழியர்கள் அனைவரும் பணியிடை நீக்கம்

பனிஹால்/ஜம்மு, ஜூலை 6: ஜம்மு-காஷ்மீரில் பள்ளிக்கூட வகுப்பறையில் 7-ஆம் வகுப்பு மாணவரை வைத்து பூட்டிச் சென்ற விவகாரம் தொடர்பாக பள்ளி ஊழியர்கள் அனைவரையும் பணியிடை நீக்கம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ராம்பன் மாவட்டத்தின் கிராவா பகுதியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் கடந்த 5-ஆம் தேதி 15 நாள் கோடைகால விடுமுறை தொடங்கியது.

அதற்கு முந்தைய தினம் (4-ஆம் தேதி) மாலை வகுப்புகள் முடிந்ததைத் தொடர்ந்து அனைத்து வகுப்பறைகளையும் ஊழியர்கள் பூட்டிச் சென்றனர்.

எனினும், அந்தப் பள்ளியில் 7-ஆம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவர் அன்றைய தினத்தில் பள்ளியைவிட்டு மாலை புறப்படவில்லை. அவர் வகுப்பறையிலேயே தூங்கிவிட்டார். இதைக் கவனிக்காமல் பள்ளி ஊழியர்கள் வகுப்பறைகளை பூட்டிச் சென்றுவிட்டனர்.

இதையடுத்து, அன்று இரவு 8 மணிக்கு விழித்த அந்த மாணவர் வகுப்பறையில் தான் சிக்கிக் கொண்டதை உணர்ந்தார். தன்னைக் காப்பாற்றுமாறு அவர் கூக்குரலிட்டார். அவரது கூக்குரலைக் கேட்ட அவ்வழியாகச் சென்ற பொதுமக்கள் அவரை வகுப்பறையில் இருந்து மீட்டனர். அவர்கள் இச்சம்பவத்தை விடியோவில் பதிவு செய்து சமூக வலைதளங்களில் வெளியிட்டனர்.

கிட்டத்தட்ட 4 மணிநேரமாக வகுப்பறையில் மாணவர் சிக்கியிருந்த விவகாரம் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவியது. இதை அறிந்த ராம்பன் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி, மாணவர் வகுப்பறையில் சிக்கிக் கொண்டதற்கு காரணமான அப்பள்ளியின் 9 ஊழியர்களையும் பணியிடை நீக்கம் செய்தார்.

சம்பந்தப்பட்ட அரசுப் பள்ளியில் தலைமை ஆசிரியர் உள்பட 6 ஆசிரியர்களும், மூன்று துணை அலுவலர்களும் பணிபுரிவதாக கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரூ.12 லட்சம் லஞ்சம்: தேசிய நெடுஞ்சாலை திட்ட இயக்குநரை கைது செய்தது சிபிஐ

புது தில்லி, ஜூலை 6: ஒப்பந்ததாரரிடம் ரூ.12 லட்சம் லஞ்சம் கேட்டதாக பதியப்பட்ட வழக்கில், தேசிய நெடுஞ்சாலை திட்ட இயக்குநர் உள்ளிட்ட 3 பேரை சிபிஐ கைது செய்துள்ளது.

இதுகுறித்து சிபிஐ வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: மேகாலய மாநிலம் ஷில்லாங்கை சேர்ந்த தேசிய நெடுஞ்சாலை திட்ட இயக்குநர் ஆனந்த் சிங் சௌஹான். தேசிய நெடுஞ்சாலை ஆணைய பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு, அந்த ஆணையம் ரூ.13.38 கோடி பாக்கி வைத்துள்ளது.

இந்தத் தொகையை விடுவிக்க ஒப்பந்ததாரரிடம் ஆனந்த் சிங் சௌஹான் ரூ.12 லட்சம் லஞ்சம் கேட்டுள்ளார். இதில் முதல்கட்டமாக ரூ.4 லட்சத்தை குவாஹாட்டியைச் சேர்ந்த புனித் அகர்வால் என்பவரிடம் அளிக்கும்படி சௌஹான் கூறியுள்ளார். இதன்படி பணத்தை அளிக்க ஒப்பந்ததாரர் சென்றபோது புனித் அகர்வால் அந்தப் பணத்தை வாங்காமல் மகேஷ் அகர்வால் என்பவரிடம் கொடுக்கும்படி கூறியுள்ளார்.

இதனிடையே, ஒப்பந்ததாரர் அளித்த புகாரின்பேரில் இந்த விவகாரம் குறித்து கடந்த 1-ஆம் தேதி சிபிஐ வழக்குப் பதிவு செய்தது. பின்னர், ஒப்பந்ததாரரிடம் பணம் வாங்கும்போது 3 பேரையும் கைது செய்ய சிபிஐ நடவடிக்கை எடுத்தது.

அதன்படி, பணத்தை வாங்கும்போது 3 பேரையும் சிபிஐ கைது செய்தது. பின்னர், 3 பேருக்குச் சொந்தமான இடங்களிலும் சிபிஐ சோதனை நடத்தியது. தொடர்ந்து வழக்கில் சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது.

புதிய கூட்டுறவு ஆயுள் காப்பீட்டு நிறுவனம் தொடங்கப்படும்

அமித் ஷா அறிவிப்பு

புது தில்லி, ஜூலை 6: நாட்டில் புதிதாக கூட்டுறவு ஆயுள் காப்பீட்டு நிறுவனம் தொடங்கப்படும் என்று மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா அறிவித்தார்.

மத்திய கூட்டுறவு அமைச்சகம் உருவாக்கப்பட்ட 5-ஆம் ஆண்டு நிகழ்ச்சி தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் மத்திய உள்துறை, கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா கலந்துகொண்டு பேசியதாவது:

கூட்டுறவுத் துறை அமைச்சகம் உருவாக்கப்பட்டது, இந்திய கூட்டுறவு இயக்கத்துக்கு புதிய எழுச்சியைத் தந்துள்ளது. ஏனெனில், காங்கிரஸ் அரசின் ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு இயக்கத்துக்கு முக்கியத்துவம் தரப்படாமல் புறக்கணிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் 8.5 லட்சம் கூட்டுறவு சங்கங்கள், 30 கோடி உறுப்பினர்களுடன் செயல்படுகின்றன. கூட்டுறவு அமைப்பை நவீனமயமாக்கவும், வெளிப்படையானதாக்கவும், தொழில்நுட்ப வசதி கொண்டதாக்கவும், போட்டிக்குத் தயார்படுத்தவும் மத்திய கூட்டுறவு அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கூட்டுறவு மாதிரியின்கீழ் பாரத் டாக்ஸி சேவை தொடங்கப்பட்டது. அது சிறப்பாக செயல்படுகிறது. அடுத்த 2 ஆண்டுகளுக்குள் அந்தச் சேவை மேலும் 500 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும். பாரத் டாக்ஸி சேவை போல, கூட்டுறவுத் துறைக்காக ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ஒன்றை அரசு ஆரம்பிக்கவுள்ளது.

விதைகள் உற்பத்திக்காக பிரத்யேகமாக தேசிய விதைகள் உற்பத்தி கூட்டுறவு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அது மூன்று ஆண்டுகளில் நாட்டிலேயே அரசு சாராத மிகப்பெரிய விதை உற்பத்தி அமைப்பாக உருவெடுக்கும் என நம்புகிறேன்.

பால், சர்க்கரை, உரம், வங்கி வர்த்தகங்களுக்கு அப்பாற்பட்டு, மேலும் பல புதிய துறைகளில் கூட்டுறவு அமைப்புகள் நுழைந்துள்ளன. கூட்டுறவுத் துறை சந்திக்கும் பிரச்னைகளை மத்திய கூட்டுறவு அமைச்சகம் அடையாளம் கண்டுள்ளது. கூட்டுறவுத் துறை தொடர்பான தரவுகளைச் சேமிக்கும் தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது, நாட்டில் கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்த உதவும். பணி நியமனங்களில் நிலவும் ஊழலை முடிவுக்குக் கொண்டு வருவதன்மூலம், மக்களின் நம்பிக்கையை கூட்டுறவுத் துறையால் வெல்ல முடியும்.

மத்திய கூட்டுறவு அமைச்சகம், மாநில அரசு விவகாரத்தில் தலையிட ஏற்படுத்தப்படவில்லை; மாநிலங்களுக்கு உதவி செய்யவே ஏற்படுத்தப்பட்டது.

அது கொள்கையை உருவாக்கும் பணியில் ஈடுபடும். 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த பாரதத்தை உருவாக்க கூட்டுறவுத் துறை முக்கியப் பங்காற்றும் என நம்புகிறேன். ஏழைகள், கிராம மக்கள் நலன்களுக்காக பாஜக கூட்டணி அரசு ஓய்வின்றி பணியாற்றி வருகிறது. பாஜக கூட்டணி அரசின் ஆட்சிக் காலத்தில் ஏராளமான புதிய அமைச்சகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்றார் அமித் ஷா.

கொல்கத்தாவில் சியாமா பிரசாத் முகர்ஜிக்கு 125 அடி உயர சிலை

அமித் ஷா அடிக்கல் நாட்டினார்

கொல்கத்தா, ஜூலை 6: கொல்கத்தாவில் பாரதிய ஜன சங்கத்தின் நிறுவனர் சியாமா பிரசாத் முகர்ஜிக்கு 125 அடி உயர சிலை அமைப்பதற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திங்கள்கிழமை அடிக்கல் நாட்டினார்.

கொல்கத்தாவில் திங்கள்கிழமை நடைபெற்ற சியாமா பிரசாத் முகர்ஜியின் 125-ஆவது பிறந்த தின கொண்டாட்ட நிகழ்ச்சியில் அமித் ஷா கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் சியாமா பிரசாத் முகர்ஜிக்கு 125 அடி உயரத்துக்கு பிரம்மாண்ட சிலை அமைப்பதற்கான பூமி பூஜை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அமித் ஷா அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதையடுத்து கொல்கத்தாவின் பவானிபூரில் உள்ள சியாமா பிரசாத் முகர்ஜியின் இல்லத்துக்கும் அமித் ஷா சென்று மரியாதை செலுத்தினார்.

கடந்த 1901-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6-ஆம் தேதி பிறந்த சியாமா பிரசாத் முகர்ஜி, 1953-ஆம் ஆண்டு ஜூன் 23-ஆம் தேதி தடுப்புக் காவலில் இருந்தபோது உயிரிழந்தார். ஜம்மு-காஷ்மீர் முழுவதையும் இந்தியாவுடன் இணைக்க வேண்டும், சிறப்பு சட்டப் பிரிவு 370-ஐ நீக்க வேண்டும் என வலியுறுத்தி அவர் தீவிர பிரசாரம் செய்தார். அவரது கோரிக்கைகளில் ஒன்றான சிறப்பு சட்டப் பிரிவு 370-ஐ பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு கடந்த 2019-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் தேதி ரத்து செய்தது குறிப்பிடத்தக்கது.

கர்நாடகத்தில் கைப்பேசி விளக்கின் ஒளியில் அரசுப் பேருந்து இயக்கம்: மூவர் இடைநீக்கம்

கல்புர்கி, ஜூலை 6: கர்நாடகத்தில் கைப்பேசி விளக்கின் ஒளியில் அரசுப் பேருந்தை இயக்கி, பயணிகளின் பாதுகாப்பை அபாயத்துக்கு உட்படுத்தியதாக ஓட்டுநர் உள்பட மூவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை 4-ஆம் தேதி இரவு கர்நாடக மாநிலம் கல்புர்கி-சின்சோலி வழித்தடத்தில், முற்றிலும் இருளில் பயணித்த அரசுப் பேருந்தில் முகப்பு விளக்கு சரிவர எரியவில்லை. இதனால் சாலை தெரிவதற்கு பேருந்து நடத்துநர் கைப்பேசி விளக்கை ஒளிரவிட்டபடி சென்றார். அந்த ஒளியில் ஓட்டுநர் பேருந்தை ஓட்டிச் சென்றார். இந்தக் காணொலி சமூக ஊடகத்தில் பகிரப்பட்ட நிலையில், ஓட்டுநர் மற்றும் நடத்துநரின் செயலால் பேருந்து பயணிகளின் பாதுகாப்பு அபாயத்துக்கு உட்படுத்தப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வறிக்கையின்படி, பேருந்தை சரிவர பழுதுபார்க்காத அலுவலர், மேற்பார்வையாளர், அலட்சியமாக பேருந்தை இயக்கிய ஓட்டுநர் ஆகியோர் கடமை தவறியதாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

SBI பாரத ஸ்டேட் வங்கி ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை
2வது தளம், செஞ்சிலுவைக் கட்டிடம், # 32, செஞ்சிலுவைச் சாலை, எழும்பூர், சென்னை 600008
Ph: 044-28881082. E-mail: sbi.05170@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரம்: திரு. பார்த்தசாரதி.C, போன்: 9444719444 / 044-28881034
நகர வழக்கு அதிகாரியின் பெயர் : திருமதி. K.அனுபமா (மொபைல்: 6369672894)

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 2002 மற்றும் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) மற்றும் 9(1) படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான கீழ்க்காண் அறிவிப்பு.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, அவர்களால் கவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சென்னை, பாரத ஸ்டேட் வங்கி, ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளைக்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித்தொகையினை வசூலிக்கும் பொருட்டும் சொத்தானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "என்ன உள்ளதோ அப்படியே" எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: திரு. சரவண பாபு. T த/பெ. திரு. தங்கராஜ் & இணைகடன்தாரர் பெயர்: திருமதி.கௌரி பாய். S க/பெ. திரு. சரவண பாபு. T, இருவரின் குடியிருப்பு முகவரி: எண்.3-803, வடக்கு ஈச்சம்பட்டி, கல்பாளையம், மண்ணச்சநல்லூர், திருச்சிராப்பள்ளி – 621 005. அலுவலகத்தின் முகவரி: திரு. சரவண பாபு. T (கடன்தாரர்) த/பெ. திரு. தங்கராஜ், M/s Aqua Green Hotels And Resorts, எண்: 4/276, அம்பத்தூர் பழைய சாலை, ரூபாய்ட்டு, வேலம்மாள் பொறியியல் கல்லூரி அருகில், சென்னை – 600 066. சொத்தின் முகவரி: திரு. சரவண பாபு. T (கடன்தாரர்) த/பெ. திரு. தங்கராஜ் & திருமதி. கௌரி பாய். S (இணைகடன்தாரர்), க/பெ. திரு. சரவண பாபு.T, எண்.1451, F1, முதல் தளம், E பிளாக், நடராஜபுரம் தபால் வேக் விது, தெரு, காஞ்சி நகர் விரிவாக்கம், விநாயகபுரம், சென்னை – 600 099.

நிலுவைத் தொகை: 03.07.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான ரூ.35,46,967/- (ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சத்து நாற்பத்து ஆறு ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஏழு மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி, இடைநிலச் செலவுகள் மற்றும் அனைத்து இதர செலவினங்கள். கவாதீன நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விவரம்: முதன்மை பிணைச் சொத்துக்கள்: சொத்து: மாதவரம் கிராமத்தில் அமைந்துள்ள மொத்த பரப்பளவு 8173சதுர அடியில் 11.08.2017 தேதியிட்ட ஆவண எண். 4618/2017 இன்படி திரு. T. சரவண பபு மற்றும் திருமதி.S. கௌரிபாய் ஆகியோருக்குச் சொந்தமான பிரிக்கப்படாத பங்கு 297சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. NAVGANESH TULIP என்ற பெயரில் உள்ள (பிளாக் E) குடியிருப்பு ஃப்ளாட்டின் முதல் தளத்தில் பரப்பளவு 555சதுர அடி கொண்ட ஃப்ளாட் எண்:F-1. அட்டவணை: A வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மாதவரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், காஞ்சி நகர் விரிவாக்கம், சர்வே எண்.1451, 06.01.2014 தேதியிட்ட நகர் சர்வே நிலப்பதிவேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தின்படி TK8A/1186/1423 இன்படி T.சர்வே எண்.87/13, பிளாக் எண்.4, வார்டு -D, மனை எண்.B இல் அமைந்துள்ள பரப்பளவு 8173சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்: திரு. கம்பமணி நாயக்கர் அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து; தெற்கில்: 20 அடி அகல சாலை; கிழக்கில்: திரு. எட்டி நாயக்கர் அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து; தெற்கில்: திருமதி. விசிலி சாஜன் விற்பனையாளர் அவர்களுக்குச் சொந்தமான மனை எண்.A; நாற்புறப்புறம்: கிழக்கு மேற்காக வட புறம்: 81 அடி 9 அங்குலங்கள்; கிழக்கு மேற்காக தென் புறம்: 81 அடி 6 அங்குலங்கள்; வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 98 அடி 9 அங்குலங்கள்; வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 101 அடி 6 அங்குலங்கள். அட்டவணை: B (இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து) இங்கு மேலும் முழுவதுமாக அட்டவணை - A இல் குறிப்பிடப்பட்டுள்ள 8173சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 262சதுர அடி மற்றும் கார் நிறுத்தும் இடத்தின் மொத்த விஸ்தீரணம் 297சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 35சதுர அடி நிலம். அட்டவணை: C சென்னை – 600 099, திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், மாதவரம் கிராமத்தின் காஞ்சி நகர் விரிவாக்கம், லேக் வியூ தெரு, மனை எண்.B இல் பிரிக்கப்படாத பங்கு 297சதுர அடி, NAVGANESH TULIP என்ற பெயரில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு ஃப்ளாட் (E பிளாக்) முதல் தளத்தில் SBU 555 சதுர அடி, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. CERSAI DETAILS: ASSET ID: 200037546685; Latitude:13.140735N, Longitude:80.208257E

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 23,00,000 /- | டீபணித் தொகை ₹ 2,30,000/- | ஏல உயர்வுத் தொகை ₹ 25,000/-

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 12.07.2026 & 21.07.2026 - நேரம்: காலை 11 முதல் மதியம் 1 வரை

மின் ஏலத் தேதி & நேரம்: 28.07.2026 | நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை | (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

விருப்பமுள்ள ஏலதாரர்கள், BAANKNET.COM உடன் முன் ஏல டேபணித் தொகையை மின்னணு ஏல முடிவு வரை செலுத்தவும்.
விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com மற்றும் கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் இணையதளமான www.sbi.co.in என்ற இணைப்பில் காணலாம்.

இடம்: சென்னை
தேதி: 03.07.2026
அதிகாரபூர்வ அலுவலர்,
பாரத ஸ்டேட் வங்கி, SARB, சென்னை

HDFC BANK We understand your world
ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட்
கிளை: முதல் தளம், ஜூபிலெண்ட், எண்.760, அண்ணாசாலை, சென்னை 600002.
CIN L65920MH1994PLC080618 Website : www.hdfcbank.com

கவாதீன அறிவிப்பு

(u/s 13(4) & As per Appendix IV read with rule 8(1) of the Security Interest Enforcement Rules, 2002) பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் பிரிவு 13(12) விதி 3ன் கீழ், (Securitisation I and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான எச்.டி.எஃப்.சி.பேங்க் லிமிடெட்ன் (அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு திட்டத்தின் மூலம் மாண்புமிகு NCLT-மும்பையால் 17.03.2023 தேதியிட்ட உத்தரவுக்கு முற்றுவை எச்டிஎஃப்சி லிமிடெட் ஆனது எச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட் உடன் இணைந்துள்ளது) (எச்டிஎஃப்சி), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படி, 27-03-2021 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்ட 31.01.2021 அன்றுள்ளபடி கடன் தொகையான ரூ.30,56,228/- மற்றும் திரும்ப செலுத்தும் காலம் வரை இந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி 18% p.a வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளை அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கடன்தாரர் திரு. முருகன் மற்றும் திருமதி ஜோதி ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை முழுவதையும் செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் & பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டத்தின் பிரிவு (Security Interest (Enforcement) Rules, 2002), 13(4), விதி 8ன்படி மற்றும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 01.07.2026 அன்று கீழே கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சார்பாக நேரடியாக உடைமையாக்கியுள்ளார் (Physical Possession).

இது முதற்கொண்டு கடன் பெற்றவர்களோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான விவகாரங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அப்படி ஏற்படுத்தினால் அது HDFC வங்கி லிமிடெட்க்கு வர வேண்டிய கடன்தொகைக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) விதித்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. ஏடுபெற்ற சொத்து.

அசையாச் சொத்து விவரம்:

மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கோட்டூர்புரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்டு அமைந்துள்ள **வகை எண்-1:** எழும்பூர் வட்டம், எண்.109, புலியூர் கிராமத்தின் T. சர்வே எண்.27/4, பிளாக் எண்.48 இல் அடங்கிய, சென்னை - 600 033, மேற்கு மாம்பலம், கணபதி தெரு, கதவு எண்.59/10 இல் அமைந்துள்ள நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 118சதுர அடி நிலம், அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் பரப்பளவு 236சதுர அடி அத்தளப்பரப்பு கொண்ட சொத்து ஃப்ளாட் எண்.J அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில் - முதல் தளம் ஃப்ளாட் எண்.K, தெற்கில் - முதல் தளம் ஃப்ளாட் எண்.I, கிழக்கில் - பொது பாதை மற்றும் மேற்கில் - பொது சுவர். **வகை எண்-2:** எழும்பூர் வட்டம், எண்.109, புலியூர் கிராமத்தின் T. சர்வே எண்.27/4, பிளாக் எண்.48 இல் அடங்கிய, சென்னை - 600 033, மேற்கு மாம்பலம், கணபதி தெரு, கதவு எண்.59/10 இல் அமைந்துள்ள நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 122.5சதுர அடி நிலம், அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் பரப்பளவு 245சதுர அடி அத்தளப்பரப்பு கொண்ட சொத்து ஃப்ளாட் எண்.K அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில் - ஃப்ளாட் எண்.L, தெற்கில் - ஃப்ளாட் எண்.J, கிழக்கில் - பொது பாதை மற்றும் மேற்கில் - பொது சுவர்.

இடம்: சென்னை
தேதி: 07-07-2026
ஒப்பம்/ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
HDFC பேங்க் லிமிடெட்

Chola சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B- 4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032. கிளை அலுவலகம் : 3வது தளம், மனை எண். 6A மற்றும் 6B, கோரமண்டல் டவுன், மேனாம்பேடு சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை – 600058

2002 ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர் / அடமானதாரர்களான தங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் 2002 ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் பிரிவு 13 (2)ன் கீழ் இந்த அறிவிப்பு ஏற்பு அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் தங்களுக்கு அளிக்கப்பட்டு அது பட்டுவாடா ஆகாமல் திரும்பப்பெறப்பட்டுள்ளதையும்து தங்களுக்கு எதிரான செயல்முறைகளை தொடங்கியுள்ளது. எனவே, தாங்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தங்களின் கடன் கணக்குக்கு எதிராக உள்ள கடன் நிலுவை தொகையை வட்டியுடன் சேர்த்து செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் கம்பெனியானது அதன் கடன்களை வட்டி மற்றும் செலவுகளுடன் சேர்த்து பெறுவதற்காக மேற்படி சட்டம் பிரிவு 13 உபபிரிவு (4)-ன் கீழ் கீழே குறிப்பிட்டுள்ள ஈட்டுறுதி சொத்தினை கையகப்படுத்துவதற்கு தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அறிவிப்பு கம்பெனிக்கு கிடைக்க கூடிய வேறு எந்த தீர்வுக்கும் எந்த பாரபட்சமும் இல்லாமல் தங்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதை குறிப்பிட தேவையில்லை.

கடன் கணக்கு எண்: HE01AMA00000032933; **கடன்தாரர்/கள் மற்றும் இணை கடன்தாரர்/களின் பெயர் மற்றும் முகவரி:** 1. திருமதி. டி. ஜெயலட்சுமி (காலஞ்சென்ற பி. துலுக்காணம் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு மற்றும் மனைவி), 2. M/s. ஸ்ரீ லட்சுமி பவர் சிஸ்டம் (அதன் உரிமையாளர் காலஞ்சென்ற துலுக்காணம் அவர்களால் பிரதிநிதித்துவம் படுத்தப்படுகிறது), 3. காலஞ்சென்ற திரு. பி. துலுக்காணம் அவர்களின் அனைத்து சட்டப்பூர்வ வாரிசுகள், முகவரி: எண்.32, பிரியா நகர், 2-வது விரிவாக்கம், நந்திவரம், கூடுவாஞ்சேரி, காஞ்சிபுரம், தமிழ்நாடு – 603 202.; **கடன் தொகை:** ரூ.71,90,000/-; **கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத் தொகை:** 27-06-2026 மற்றும் 27-06-2026 அன்றைய நிலவரப்படி ரூ.67,40,553/- மற்றும் அதற்கான வட்டி.

சொத்தின் விவரம்: காலஞ்சென்ற திரு. பி. துலுக்காணம் (விண்ணப்பதாரர்) என்பவருக்கு சொந்தமான சொத்து:- காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, கூடுவாஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ள பிரியா நகர் 2-வது விரிவாக்கம் (லேஅவுட் அங்கீகார எண். LP/DTCP.No.153/90), சர்வே எண்கள் 4/3C2 மற்றும் 4/3D-ல் அடங்கியுள்ள, 1750 சதுர அடி பரப்பளவிலான மனை எண் 32-ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம். எல்லைகள்: வடக்கில் – மனை எண் 31, தெற்கில் – மனை எண் 33, கிழக்கில் – இதர மனைகள், மேற்கில் – 30 அடி அகல லேஅவுட் சாலை. அளவீடு: வடபுறத்தில் கிழக்கு மேற்காக – 50 அடி, தென்புறத்தில் கிழக்கு மேற்காக – 50 அடி, கிழக்கு புறத்தில் வடக்கு தெற்காக – 35 அடி, மேற்கு புறத்தில் வடக்கு தெற்காக – 35 அடி. இச்சொத்தானது சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் எல்லைக்குட்பட்டது.

தேதி : 07-07-2026
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கனரா வங்கி Canara Bank
சென்னை வேப்பேரி கிளை (0943)
PB எண்.477, எண்.136, A.P. சாலை, சூளை, வேப்பேரி, சென்னை -600007
Ph.: 044-26693408